1. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(உ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)–ன்கீழ், ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சட்டமன்றப் பேரவை விதி 13 (2)–ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து இன்று முன்மொழியப்பெறும் அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

3. அரசினர் தனித் தீர்மானம்

கச்சத் தீவு தொடர்பான வழக்கில் தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையையும் சேர்த்துக்கொள்ள உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS